போக்குவரத்து துறை

அனுப்புனர்

போக்குவரத்து ஆணையர்,
எழிலகம், சேப்பாக்கம்,
சென்னை -5

பெறுநர்

உரிமை குரல் ஓட்டுநர் தொழில் சங்கம்,
எண்-3 கட்டடத்தொட்டி சந்து, புது
மார்க்கெட், மேற்கு தாம்பரம்,
சென்னை -45.

ந.க எண்: 17778/m2/2021 நாள்: 08.07.2021

பொருள்: போக்குவரத்து துறை - உரிமை குரல் ஓட்டுநர் தொழில் சங்கம் எண்-3, கட்டடத்தொட்டி சந்து, புது மார்க்கெட், மேற்கு தாம்பரம், சென்னை - 45 - அவர்களின் கோரிக்கை மனு - மேல்நடவடிக்கை - தொடர்பாக.

பார்வை: 1. உரிமை குரல் ஓட்டுநர் தொழில் சங்கம் எண்-3 கட்டடத்தொட்டி சந்து, புது மார்க்கெட், மேற்கு தாம்பரம், சென்னை -45 அவர்களின் கோரிக்கை மனு நாள்: 30.06.2021.

2. இவலுவலக கடித ந.க.எண்:4658/M2/2021 நாள்:04.03.2021.

3. அரசு துணை செயலாளர், உள்(போ .து- ) தலைமை செயலகம், சென்னை–9 அவர்களின் கடித எண்: 13710/போ.வ 1/2021-1/ நாள்: 15.03.2021.

பார்வையில் 1-ல் காணும் உரிமை குரல் ஓட்டுநர் தொழில் சங்கம் எண்-3 கட்டடத்தொட்டி சந்து, புது மார்க்கெட், மேற்கு தாம்பரம், சென்னை -45 அவர்களின் கோரிக்கை மனுவில் டூரிஸ்ட் கேப் மற்றும் மாக்ஸி கேப் வாகனங்களுக்கு ஆட்டோக்களுக்கு மீட்டர் கட்டணம் நிர்ணயம் செய்தது போல நிர்ணயம் செய்ய வேண்டியுள்ளார்கள்.

Scanned By Scanner Go

இந்நிலையில் மனுவின் மேல் நடவடிக்கை பொருட்டு பார்வை 2-ல் காணும் இவ்வலுவலக கடிதம் வாயிலாக டூரிஸ்ட் கேப் மற்றும் மாக்ஸி கேப் வாகனங்களுக்கு கட்டணம் நிர்ணயம் செய்ய வேண்டி உரிய வழிகாட்டுதல்கள் வழங்குமாறு அரசு துணை செயலாளர்,உள் போக்குவரத்து துறை-III, தலைமை செயலகம்,சென்னை அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டது. மேற்படி பார்வை 3-ல் காணும் அரசு துணை செயலாளர் அவர்களின் கடிதத்தில் தனியார் ஆம்னி பேருந்து பயண கட்டணம் நிர்ணயம் செய்வது குறித்து உச்ச நீதி மன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளதால் ஒப்பந்த ஊர்தி வாகனங்களுக்கு தற்போது கட்டணம் வரன்முறைபடுத்த இயலாத நிலை உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் தங்களின் கோரிக்கைகள் அரசின் பரிசீலனையில் உள்ளது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒம்/—மு.மணக்குமார்
கூடுதல் போக்குவரத்து ஆணையர்,
போக்குவரத்து ஆணையர் அலுவலகம்,
சேப்பாக்கம் , சென்னை—5

நகல்

1. அரசு துணை செயலாளர்,(உள்) போக்குவரத்து துறை-III, தலைமை செயலகம்,சென்னை -9

//ஆணைப்படி//

மாநில போக்குவரத்து அதிகாரியின்
நேர்முக உதவியாளர்
சேப்பாக்கம் , சென்னை—5

Scanned By Scanner Go